**பத்தேகம பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 1,533,417 இற்கான செலவுகளுக்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது அச் செலவுகளை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்காமல், மீளாய்வாண்டிற்கான செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகள் ரூபா 1,533,417 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,933,417 இற்கான மூலதன உதவிக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது அவ் வருமானத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல், மீளாய்வாண்டிற்கான வருமானம் என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதன உதவி ரூபா 1,933,417 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 18,089,647 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதன உதவி ரூபா 18,089,647 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 3,418,075 தொகை எனினும் ரூபா 3,098,757 தொகை மாத்திரம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால்

நிதிக் கூற்றுக்களில் மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 319,318 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,824,541 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,534,576 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மூலதனச் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 289,965 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை மீதி ரூபா 6,059,609 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,892,161 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 2,167,448 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 131,100 இற்கான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 2,096,141 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,546,774 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 549,367 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,247,410 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல், ஆண்டிற்கான வருமானம் என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 5,247,410 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 295,253 தொகையும், முற்பணக் கொடுப்பனவு என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவு ரூபா 295,253 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) மீளாய்வாண்டின் போது வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக வழங்கியிருந்த கழிவு ரூபா 47,674 தொகை உதவித் தொகை பங்களிப்புத் தொகை மற்றும் மானியக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 47,674 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(க) ரூபா 47,168 தொகை பெறுமதியான பொருட் பதிவேட்டுப் பண்டங்கள், பொறியும் பொறித் தொகுதியின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் ரூபா 47,168 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 தொங்கல் கணக்குகள்

------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,581,230 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு சீராக்கல் மேற்கொள்ளப்படாமல், திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 140,828,273 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் வரைபுகள் மற்றும் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, முறையாக பேணப்பட்ட கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் பதிவேடு, காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

விழாச் செலவுகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று தொடர்பான விழாச் செலவுகள் தொடர்பாக ஏதேனும் ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை மிகைக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்குமிடத்து அதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற வேண்டும். எனினும் அவ்வாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் 2014 நவம்பர் 19 பத்தேகம நகர வடிவமைப்பு தொடர்பாக, நகர மண்டபம் மற்றும் அலுவலகம், பஸ் நிலையம், சிறுவர் பூங்கா, பலசரக்குத் தோட்டத்திற்காக கட்டிடங்களுக்க அடிக்கல் வைக்கும் கொண்டாத்திற்காக ரூபா 141,301 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

2014 நவம்பர் 19 திகதி அடிக்கல் வைக்கும் கொண்டாட்டம் நடைபெற்ற போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2015 பெப்ரவரி 28 திகதி வரை பஸ் நிலையம், சிறுவர் பூங்கா மற்றும் பலசரக்கு தோட்டம் ஆகிய செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அதற்காக நிதி வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,034,220 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விட குறைந்த வருமானம் ரூபா 3,278,506 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,959,374 இற்கான வீத வரி, ரூபா 24,631 இற்கான ஏக்கர் வரி மற்றும் ரூபா 352,235 இற்கான வாடகை என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை

சட்டத்தின் பிரிவுகள் 158(1)(அ) மற்றும் 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 784,875 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,600,130 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினனால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவைகளின் பிரகாரம் தலைவர் உட்பட 09 அங்கத்தவர்களினாரும் 2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. அதே போல் 2013 ஆண்டிற்காக தலைவர் மற்றும் 14 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று வருடங்களாகக் காணப்படும் ரூபா 72,775 இற்கான முற்பண மீதி ஒன்று மற்றும் ரூபா 17,077 இற்கான முற்கொடுப்பனவு மீதி ஒன்றினை இனங்காணாமல் திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கணக்குகள் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 2,794,009 இற்கான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் நிதிப் பிரமாணங்கள் 565(4) இன் பிரகாரம் வைப்புப் பேரேடு பேணப்படும் போது ஒவ்வொரு நிதியாண்டிற்காக புதிதாக வைப்புப் பேரேடு ஆரம்பிக்கப்பட்டு மீதிகள் முன்கொண்டுவரும் போது வைப்புப் பேரேட்டில் ஒவ்வொரு கணக்கின் மீதி மற்றும் அது அமைந்துள்ள விதம் முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 10 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 49,500 இற்கான முற்பணவு கணக்காய்வுத் திகதியாகிய 2015 பெப்ரவரி 25 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான PF-7408 இலக்கம் கொண்ட கப் வண்டிக்காக எரிபொருள் தேவையை இனங்கண்டு எரிபொருட் கட்டணங்களின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், தலைவரினால் 2014 திசெம்பர் 16 முதல் 31 திகதி வரை காலப்பகுதியில் 330.83 லீற்றர் எரிபொருள் கைக்காசுக்குப் பெற்று விலைப் பட்டிகளை சமர்ப்பித்து ரூபா 44,000 தொகை ஒன்றினை சபை நிதியத்தில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

(உ) சபையில் கடமையாற்றும் அலுவலர்களினால் பெற்றிருந்த ஆதனக் கடன், 2005 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக உள்நாட்டு விவகார

அமைச்சுச் செயலாளரினால் சுற்று நிருபத்தின் 11.5.2 பிரகாரம் அரசினால் செலவிடப்படும் பணத்தை சபைக்கு மீளளிப்பு செய்ய வேண்டும். எனினும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாமையால் கணக்காய்வுத் திகதியாகிய 2015 பெப்ரவரி 24 திகதி வரை ரூபா 902,776 தொகை ஒன்று உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

1987 இன் 15 இன் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 184 இன் மூலம் முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் மீது வெளியிடப்பட்ட 2005 அக்டோபர் 05 திகதிய இலக்கம் : 1413/15 கொண்ட இலங்கை குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச சபை ஒன்றின் தலைவர், உப தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு குறிப்பிட்ட மாதத்தில் நடைபெற்ற சபை பொதுக் கூட்டங்கள், குழுக் கூட்டங்களில் பங்குபற்றாமை மற்றும் மருத்துவக் காரணங்கள் தவிர சபையின் அங்கீகாரத்துடன் விடுமுறை பெற்றுக்கொள்ளல் மீது சபை அமர்வுப் படி செலுத்த முடியாது என அறிவித்திருந்த போதிலும், வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக சபைப் பொதுக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றாத மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத மந்திரமாருக்கு 2014 ஆண்டின் போது சபை அமர்வுப் படியாக ரூபா 51,500 சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

3.4 கல்வணய்ஸ் குழாய்கள் (GI PIPE) பற்றாக்குறை

-------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 நவம்பர் மாதத்தின் போது 1¼" கல்வணய்ஸ் குழாய்கள் 664 சபைக்கு வழங்கியிருந்தது.

2015 ஏப்ரல் 02 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குக் கிடைத்திருந்த 664 கல்வணய்ஸ் குழாய்களையும் பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. தலைவர்களின் வாய்மொழி மூல அறிவுரைகயின் பிரகாரம் அக் குழாய்களில் 232 யக்கலமுள்ள பிரதேச சபைக்கும், 104 குழாய்கள் நாகொட பிரதேச சபைக்கும் வழங்கியிருந்தது.

(ii) பத்தேகம பிரதேச சபையில் 70 குழாய்களும், யக்கலமுள்ள பிரதேச சபையில் 198 குழாய்களும், நாகொட பிரதேச சபையில் குழாய்கள் காணப்படவில்லை என பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(iii) இதன் பிரகாரம் சபைக்கு வழங்கியிருந்த 1¼" கல்வணய்ஸ் குழாய்கள் 664 இல் 396 குழாய்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. குழாய் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 438,372 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறாகக் கிடைத்திருந்த வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன், சில செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்